# மகிழ்ச்சி

MAGIZHCHI
MAGAZINE

AUGUST
2024




C.S.I. TAMIL CHURCH SHARJAH
The United Arab Emirates,
Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com
For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| செயலர் மடல் | 3 |
| திருமறை தியானம் | 4 |
| பெண்கள் பகுதி | 7 |
| அறிந்து கொள்வோம் | 9 |
| இனிய இல்லறம் | 10 |
| Church History | 13 |
| திருமறையை தெரிந்துகொள்வோம் | 16 |
| Kids Corner | 17 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 20 |
| Daily Bible Reading | 22 |
| ஆராதனை தியானப் பொருள் | 23 |



மகிழ்ச்சி
ஆகஸ்ட் - 2024

# From the Presbyter's Desk



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

மீட்பரும் இரட்சகரமாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய இன்ப நாமத்திலே அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிதாவாகிய கடவுளாலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

நித்தம் வழிநடத்துகின்ற அன்பின் ஆண்டவர் கடந்த நாட்கள் முழுவதும் நம்மோடு இருந்து, நம்மை கண்ணின் மணியைப் போல பாதுகாத்து, நம்மை வழிநடத்தி வந்திருக்கிறார், நம்மை வழி நடத்தி வந்த கடவுளுக்கு நன்றிகளையும் ஸ்தோத்திரங்களையும் செலுத்துகிறேன்.

கடந்த மாத திருச்சபையின் ஊழியங்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெறக் கிருபைச் செய்த கடவுளை ஸ்தோத்தரிக்கிறேன். நம் திருச்சபையின் ஊழியங்கள் அனைத்திலும் உற்சாகமாய் பங்கு பெற்று ஆண்டவருடைய நாமத்தை மகிமைப்படுத்தின திருச்சபையார் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோடை விடுமுறை நாட்களில் நமது தாய் தேசத்திற்கு சென்று வர இருக்கின்ற திருச்சபை மக்களை வாழ்த்துகின்றேன். இந்த விடுமுறை காலங்களில் கர்த்தர் நம்மோடு இருந்து நம்மை பாதுகாக்கவும், காலச் சூழ்நிலைகள் நமக்கு அனுகூலமாக அமையவும், பாதுகாப்பான பயணத்திற்காகவும், ஜெபிக்கிறேன். விடுமுறை நாட்கள் நாம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைவதாக. தொடர்ந்து திருச்சபையின் ஊழியங்களுக்காக ஜெபிப்போம், திருமறையை வாசிப்போம், ஆவிக்குரிய வாழ்விலே வளர்ச்சி பெறுவோம் தொடர்ந்து கிறிஸ்துவின் சாட்சிகளாய் நாம் வாழ்வோம். கடவுள்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

இறைபணியில்
அருள்திரு. **J.ஜான் ஜெபலின் ஜோஸ்**

☎ **+971 50 703 2150**
**e-mail : tamilchurchcsisharjah@gmail.com**



# செயலர் மடல்

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே, திருச்சபையின் அங்கங்களாகிய உங்களனைவருக்கும் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்; உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன் (சங்கீதம் 9:1). ஆம் எல்லா சூழ்நிலைகளிலும் நம்மை கண்மணியைப் போல் தம் செட்டைகளின் மறைவில் பாதுகாத்து வழிநடத்தும் அவருடைய அதிசயங்களுக்காக அவரைத்துதிப்போம். விசேஷமாக விடுமுறைக்காகத் தாயகம் சென்றுள்ள நம் திருச்சபையின் குடும்பங்களைப் பாதுகாத்து பயணங்களில் அனுதினமும் உடனிருந்து தேவைகளைச் சந்திக்கும் நம் தேவாதி தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்போம்.

இந்த மாதத்தில் நமது திருச்சபையின் வாயிலாக சுவிசேஷ ஊழியங்கள் மற்றும் சமூகத் திருப்பணியாற்றும் நிறுவங்களுக்கான காணிக்கைகளை அந்தந்த நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டது. இத்தகைய ஊழியங்களைத் தாங்கிவரும் திருச்சபையின் அங்கங்கள் அனைவருக்கும் திருச்சபையின் நிர்வாகக் குழுவின் சார்பில் வாழ்த்துதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கர்த்தருக்குச் சித்தமானால் நமது திருச்சபையின் ஸ்தோத்திரப் பண்டிகை நவம்பர் மாதம் 17-ம் தேதி நடத்த நிர்வாக குழுவால் தீர்மானிக்கப் பட்டுள்ளது. திருச்சபையார் அதற்காக ஜெபிக்கவும் ஆயத்தப்படவும் கேட்டுக்கொள்கிறோம். இந்த ஆண்டின் ஸ்தோத்திரப் பண்டிகையின் பொறுப்பாளர்களாக Mr. Mohandas மற்றும் Mr. Pauldeniser Sekar அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திருச்சபையார் யாவரும் அவர்களுக்கு தங்கள் ஒத்துழைப்பை நல்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

இந்த மாதத்திலும் பிரயாணப்படுகின்ற திருச்சபையின் குடும்பத்தார் அனைவருக்காகவும் ஜெபிப்போம். குறிப்பாக நமது ஆயர் அவர்களும் விடுமுறைக்காக தாயகம் செல்லவிருக்கின்றார். அவரது பயணத்திற்காகவும் அங்கு அவருடைய சொந்த அலுவல்கள் மற்றும் ஊழியக் காரியங்கள் எல்லாவற்றையும் மன நிறைவோடு நிறைவேற்றி மீண்டும் குடும்பமாக இந்த தேசத்தில் வந்து தங்கள் பணிகளைத் தொடர ஜெபிப்போம்.

கடந்த மாதம் முழுவதும் நடைபெற்ற ஆராதனைகளுக்காக குறிப்பாக ஜூலை மாதம் 28-ம் நாளன்று நடைபெற்ற விசேஷ “திருமண உடன்படிக்கை ஆராதனை” மற்றும் அனைத்து ஜெபக் கூடுகைகளுக்காகவும் அதன் வாயிலாக நாம் பெற்றுக்கொண்ட இறை ஆசீர்வாதங்களுக்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

தேவன் தாமே நம்மனைவரையும், தாயகத்தில் வாழும் நம் உறவுகளையும் பாதுகாத்து, ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

திருச்சபை ஊழியத்தில்
**ஸ்டீபன் குணசேகர்**
☎ +971 58 5896 975



# நிறைவான கடவுளின் சமாதானம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

“அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.” (பிலிப். 4:7)

பவுலடிகளார் பிலிப்பியத் திருச்சபைக்கு எழுதுகின்ற கடிதத்தில் ஆண்டவர் இயேசுவோடுள்ள உறவில் நிலைத்து நின்று இறை சமாதானத்தை பெற்று வாழ வேண்டும் என தனது விருப்பத்தை தெரிவிக்கிறார். இதற்கான வழிமுறைகளையும் இப்பகுதியில் தெளிவாக பவுலடிகளார் குறிப்பிடுகிறார்.

இவ்வுலகில் வாழும் பெரும்பாலான மனிதர்கள் சமாதானம் இன்றி கலக்கத்துடனே வாழ்கின்றனர். யாத் 14:14 இல் செங்கடலை கடக்கும் நிகழ்வில் இஸ்ரயேலரை பார்வோனின் படைகள் துரத்துகின்றபோது கலக்கமடைந்தனர். ஆனால் மோசே அவர்களிடம் கடவுள் மீது நம்பிக்கை வைத்து பயணத்தை தொடர்வோம். நீங்கள் அமைதியாக இருங்கள் கடவுள் நமக்காக எகிப்திய அணிகளோடு போரிடுவார் என்கிறார்.

இன்று நம்முடைய வாழ்வில் இறை அமைதி பெற நாம் செய்ய வேண்டிய செயல்களை சிந்திப்போம்.

## 1. சாந்தகுணம் :

"உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக.( பிலிப். 4:5) தேவைக்கு மிகுதியாயிருப்பதை இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ள நாம் தூண்டப்பட வேண்டும்,1 கொரிந்தியர் 7:27 வரையுள்ள வசனங்களில் பவுல் கொரிந்து திருச்சபை மீது கொண்டிருந்த சாந்த குணத்தையும், கொரிந்து திருச்சபை பவுல் மீது கொண்டிருந்த பற்று, பாசம் அனைத்தையும் விளக்குவதாக உள்ளது.

கி.பி.48 ஆம் ஆண்டில் யூதயாவிலும், எருசலேமிலும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது இந்த பஞ்சம் மக்களை அதிகமாக பாதித்தது. இந்த காலகட்டத்தில் கிறிஸ்தவர்களுக்கு சமயம் சார்ந்த துன்புறுத்தலும் காணப்பட்டது. இந்நிலையில் பஞ்சத்தினாலும், உபத்திரவத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக பவுல் தான் நிறுவிய சபைகளிடமிருந்து நன்கொடை திரட்டினார். 2 கொரிந்தியர் 8:23 வசனங்களில் மக்கத்தோனியா திருச்சபையார் வறுமையில் மூழ்கி இருந்தாலும் உதாரத்துவத்தோடு வாரி வழங்கினார்கள் அவர்கள் தங்களால் இயன்ற அளவுக்கும்,அளவுக்கு அதிகமாகும் கொடுத்தார்கள். இது அவர்களுடைய கனிவான சாந்த குணத்தை வெளிப்படுத்துகிறது.

## 2.கவலைப்பட வேண்டாம் :

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்" (பிலிப் 4:6)

கடவுள் மீதும் அவரது பராமரிப்பின் மீதும் முழுமையான நம்பிக்கை கொள்ள வேண்டும். நம் தேவைகளை பற்றிய மித மிஞ்சிய கவலை தவறானது. மத்தேயு 6:2534 இல் இயற்கை செல்வங்களை எடுத்துக்காட்டாக கூறி கவலையற்ற வாழ்வே வாழ ஆண்டவர் இயேசு அழைக்கிறார்.

1 பேதுரு 5:7 இல் "உங்கள் கவலைகளை எல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்." ஏனென்றால் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார். இது வாழ்வின் இடர்களும் ஆபத்துகளும் சோதனைகளும் ஏராளமாக இருக்கும். இருப்பினும் கடவுள் மீது நம்பிக்கை வைத்து கவலையற்று வாழ வேண்டும் என்கிறார்.

### 3. ஜெப வாழ்வு :

“எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோ கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். (பிலிப் 4:6)”

ஜெப வாழ்வில் நமக்கு ஆழமான நம்பிக்கை இருக்க வேண்டும். மத்தேயு 7:711 வரையுள்ள வசனங்களில் கடவுள் நமது வேண்டுதல்களுக்கு பதில் அளிக்க வல்லவர் என்பதை மிகத் தெளிவாக சுட்டிக்காட்டுகிறார். தொடக்க கால திருச்சபை ஜெபத்தினால் வலிமைப்படுத்தப்பட்டது, அவர்களுடைய வாழ்வின் மையமே ஜெபமாக அமைந்தது, அவர்கள் சந்தித்த எதிர்ப்பு சூழலை சமாளிக்கும் ஆயுதமாக ஜெபம் அமைந்திருந்தது.

இன்றைய உலகில் பெரும்பாலான மனிதர்கள் அமைதியின்றி வாழ்கின்றனர். அமைதியை மக்கள் தேடுகின்றனர். பவுல் சமாதானத்தை தேடும் மக்கள் சமாதானம் அடைவதற்கான வழிகளை கற்றுத் தருகிறார். நாமும் இந்த உலகில் சமாதானமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வை பெற்றுக் கொள்ள கடவுள் உதவி செய்வாராக. ஆமென்.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.

"ஆண்டவர் இயேசுவோடுள்ள உறவில் நிலைத்து நின்று இறை சமாதானத்தை பெற்று வாழ வேண்டும்"



# விதவையின் ஜெபம்

சீஷர்கள் இயேசுவிடம் ஆண்டவரே எங்களுக்கு ஜெபிக்க கற்றுத் தாரும் என்று கேட்டனர். அவரிடம் அற்புதங்களை செய்யவோ அல்லது உபதேசிக்கவோ கற்றுத் தாரும் என்று கேட்கவில்லை. அவர்களைக் கவர்ந்த ஒரே காரியம் அவருடைய ஜெப வாழ்க்கை. அவரைப் போலவே அவர்களும் ஜெபிக்க விரும்பினர். சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதை அவர்கள் கற்று கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் அவர்களுக்கு ஒரு ஊமையை கூறினார்.

ஒரு பட்டணத்தில் ஒரு நியாயாதிபதி தேவனுக்குப் பயப்படாதவனும் மனிதரை மதியாமலும் இருந்தார். அதே பட்டணத்தில் இருந்த ஒரு விதவை அவனிடத்தில் போய் தனக்கும் தன்னுடைய எதிராளிக்கும் இருந்த காரியத்தில் தனக்கு நியாயம் செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினார். வெகுநாளாய் நியாயம் செய்ய மறுத்த அந்த நியாயாதிபதி அவள் அடிக்கடி தன்னை அலட்டாதபடி அவளுக்கு நியாயம் செய்தான். மூன்று முக்கியமான காரியங்களை இயேசு இந்த ஊமையின் மூலமாக கற்றுக் கொடுக்கிறார்.

### 1. கவலைப்படாமல் ஜெபிக்க வேண்டும் :

அந்த விதவை தன்னுடைய பிரச்சனையை நினைத்து கவலைப்பட்டுக் கொண்டிறாமல் எழுந்து. தனக்கு உதவி செய்யக்கூடிய அந்த ஒரே மனிதனாகிய நியாயாதிபதியிடம் சென்றால். கவலைப்பட, கவலைப்பட மிக மோசமான விளைவுகள் ஏற்படும் மற்றும் கெட்ட எண்ணங்கள்

நம்முடைய மனதை நிரப்பும், கவலையானது எதிர்மறையான சூழ்நிலைகளை கவர்ந்திழுக்கும் ஒரு Magnet போன்றது. கவலை என்பது நேற்றைய வேதனைகளால் இன்றைய நேரத்தை வீணடிப்பது, நாளைய தருணங்களை இழந்து போவதாகும். "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோட கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். (பிலிப்பியர் 4:6). பவுல் இதை சிறைச்சாலையில் உள்ள இருண்ட நிலமையிலிருந்து எழுதுகிறார். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளை எல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்". (1 பேதுரு 5:7).

**2.விடா முயற்சியாய் ஜெபிக்க வேண்டும் :**

ஏழை விதவை தனக்கு நியாயம் செய்யும்படி அந்த நியாயாதியிடம் தொடர்ந்து கெஞ்சி நின்றாள். அதுபோல ஜார்ஜ் முல்லர் ஒருமுறை ஒரு மனிதனுக்காக 63 வருடங்கள் 8 மாதம் ஜெபித்தார். அவர் இறக்கும் பொழுது, இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டான்.சோர்ந்து போகாமல் ஜெபிக்க வேண்டும் விட முயற்சியாக ஜெபிக்க வேண்டும்.

**3. சந்தேகப்படாமல் ஜெபிக்க வேண்டும் :**

தேவன் பதில் அளிப்பார் என்று எதிர்பார்க்க வேண்டும், நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்கு செவி கொடுக்கிறார் என்பது நாம் அவரைப் பற்றிக் கொண்டிருக்கிற தைரியம் (1யோவான் 5:14). ஆகவே, சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு கேட்போம். பெற்றுக்கொண்டு அவரை துதிப்போம். கடவுள் தானே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக.

இறைப்பணியில் ஆயர் அம்மா.

**J.ஜெனு ஜெபலின்**
ஆயர் அம்மா



# மிஷனெரி
# EVELYN JESSEMAN BRAND

1913-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள கொல்லிமலையில் ஒரு திருமணம் நடந்தது. ஜெசிமன் மற்றும் ஈவ்லின் பிராண்ட் தம்பதியரே அவர்கள். அம்மலை 3700 அடி உயரமானது 6 மைல்கள் மலை ஏற வேண்டும். குழந்தை திருமணம், பலாத்காரத் திருமணம், மனைவியைத் தள்ளி வைப்பது, கோடாங்கியிடம் குறி கேட்பது, ஜோதிடம் பார்ப்பது, கருப்புசாமி என்னும் தெய்வத்தை வணங்குவது போன்ற மூட பழக்கங்கள் இருந்த அம்மலைஜாதி மக்களிடம் ஜெசிமன் ஈவிலின் தம்பதியர் நற்செய்தியைப் பரப்பினார்கள். 12 பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார்கள். வியாதியஸ்தர்களுக்கு மருத்துவ உதவிகளை செய்தனர். நெசவுவேலை, தச்சுப்பட்டறை, பட்டுப்பூச்சி வளர்த்தல், கட்டிடவேலை போன்றவைகளைக் கற்றுக் கொடுத்தனர். எல்லாவற்றைக் காட்டிலும் அதிகமாக வேதாகமத்தைச் கற்றுக் கொடுத்தனர். மலேரியா காய்ச்சலினால் 1929 ஆம் ஆண்டு ஜெசிமன் இறந்தார். உடனே ஈவிலின் சென்னைக்கு மாற்றப்பட்டார். அங்கு 36 ஆண்டுகள் பப்த்திஸ்து சங்கத்தில் பணியாற்றி மீண்டும் கொல்லிமலைக்குச் சென்று ஊழியம் செய்தார். 18.12.1974-ஆம் நாள் கர்த்தருக்குள் மறித்தார்கள்.



# பெற்றோரின் பொறுப்பு

**பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது.**

(கொலோசெயர் 3:14, 15).

பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது (கொலோசெயர் 3:14, 15).

ஒரு நாள் ஒரு சிறு பையன் தனது தந்தையிடம், “அப்பா, யுத்தங்கள் எப்படி ஆரம்பிக்கின்றன.?” என்று கேட்டான்.

தந்தை பதில் சொல்ல ஆரம்பித்தார்; “ஜெர்மனி நாடு பெல்ஜீயத் திற்குள் படையெடுத்து நுழைந்ததால் முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாயிற்று” என்று கூறி விளக்கத் துவங்கினார்.

அவர்களருகிலிருந்த பையனின் தாய், “பிள்ளைக்குச் சரியாகக் கற்றுக்கொடுங்கள்; யாரோ யாரையோ சுட்டுக் கொன்றதால்தானே முதலாவது உலகமகா யுத்தம் ஆரம்பித்தது” என்று இடைமறித்துக் கூறினாள்.

மனைவி இடையில் குறுக்கிட்டுப் பேசியதைக் கணவன் ரசிக்க வில்லை. சற்று எரிச்சலுடன் கூறினார்: “பையனுக்கு என்னைப் பதில் கூற விடுகிறாயா? அல்லது நீயே பதில் கூறுகிறாயா?” என்றார்.

மனைவி, முறைத்துப் பார்த்தாள்; அவர்களிருந்த அறையைவிட்டு வேகமாக வெளியேறினாள்; போகிற போக்கில் அந்த அறைக் கதவை, அவளால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக, ஓங்கி அறைந்து சாத்திவிட்டுப் போனாள்.

வீட்டில் அமைதி குடிகொண்டது. யாரும் யாரிடமும் பேசவில்லை. சிறிது நேரஞ்சென்று, பையன் மெதுவாக நாற்காலியை விட்டு எழுந்தான்;

தந்தையின் அருகில் மெதுவாகச் சென்று, "அப்பா, யுத்தங்கள் எப்படி ஆரம்பிக்கின்றன என்று இனி எனக்குச் சொல்லத் தேவையில்லை. யுத்தங்கள் எப்படி ஆரம்பிக்கின்றன என்பதை இப்பொழுது அறிந்துகொண்டு விட்டேன்" என்று கூறிவிட்டு அந்த அறையைவிட்டு வெளியே சென்றுவிட்டான்.

இதில் ஒரு உண்மை என்னென்றால், கணவன் மனைவி இருவர் கூறியதும் சரிதான். ஆஸ்ட்ரியாஹங்கேரியின் பட்டத்து அரசர் பிரான்சிஸ் ஃபெர்டினான்டு (Francis Ferdinand, Arch duke of Austria Hungary) என்பவரை செர்பியா (Serbia) நாட்டு இளைஞன் ஒருவன் சுட்டுக் கொன்றான்.

இதனால் ஆஸ்ட்ரியா நாடு செர்பியாவின்மீது யுத்தப் பிரகடனம் செய்தது. அதன் முதல் கட்டமாக ஆஸ்ட்ரியாவின் நட்புநாடான ஜெர்மனி நாட்டுப் படை, செர்பியாவுடன் நட்புடனிருந்த பெல்ஜியத்திற்குள் 1914-ம் வருடம், ஆகஸ்டு 4ம் தேதி புகுந்தது.

இந்த நிகழ்ச்சியில், கணவன் மனைவி இருவருக்கிடையேயும் சண்டையெழுந்ததற்குக் காரணம், அவரவர்களிடையே இருக்கும் "தான்" என்னும் தன்முனைப்புதான் (Ego).

பல வேளைகளில் நமது செயல்களாலும், உடல், பாவனைகளாலும், முக வனைகளாலும், சைகைகளாலும் (gesture), வார்த்தைகளாலும் (Talk) நம்மீது பிறரைச் சினமுறச் செய்கிறோம். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், குடும்பத்தில் இப்படிப்பட்ட சிறு சிறு சண்டைகள் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. களாலும்

கோபத்தினால் முறிந்த உறவுகள், சிதைந்த வாழ்க்கைகள், சீரழிந்த எத்தனை எத்தனை! இந்த இடத்தில் கோபத்தைப் பற்றிக் கவிஞர் கண்ணதாசன் எழுதிய கவிதையொன்று நினைவிற்கு வருகிறது.

**"பிள்ளைகளாய் இருந்தவர்கள்தான்**
**பெரியவரானார் அந்தப்**
**பெரியவர்கள் கோபத்தினால் சிறியவரானார்"** - என்று பாடுகிறார்.

சிறியவர்கள் வளர்ந்தால் அது வளர்ச்சி; பெரியவர்கள் சிறியவர்களானால், அது இயற்கைக்கு முரண்பட்ட விபரீதமல்லவா?

"மூர்க்கரோடு இணங்கேல்" என்று கூறுகிறது ஔவையின் ஆத்திசூடி. அதற்காக எதற்குமே கோபமே வராத ஜடமாக மனிதர்கள் இருக்கவேண்டு மென்று கூறவரவில்லை.

புனிதர் அகஸ்டின், "ஒருவன் கோபவெறி கொண்டவனாக இருந்து கொண்டு, தனக்கு மதுவெறி இல்லை என்பதில் ஏதேனும் பெருமையுண்டோ?" என்று வினவுகிறார் (Is it any merit to abstain from wine, if one is intoxicated with anger? St. Augustine).

“சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்” (திருக்குறள் 306) என்று வள்ளுவர் கூறுகிறார்.

(பொருள் - கோபம் என்னும் உயிர்க் கொல்லி, நண்பர்களையும், சுற்றத்தையும் மட்டுபல்ல, தன் சொந்த துணையாகிய மனைவியையும் சுட்டெரிக்கும்).

வள்ளுவர் மேலும் கூறுகிறார்

“தன்னைத்தான் காக்கின், சினம் காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்” - (திருக்குறள் 305).

(பொருள் - தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் சுயநலத்தின் பொருட்டாவது கோபத்தைத் தவிர்க்க வெண்டும்; அல்லவெனில், கோபம் கோபப்படும் நபரையே அழித்துவிடும்).

கோபப்படுவது எவ்வளவு ஆபத்தானது என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். அதற்காக, ஒருபோதும் கோபமே ஏற்படாத ஜடமாக மனிதனால் வாழ முடியுமா?

**கோபமும் ஒரு மனித உணர்ச்சிதான்**

கோபம் என்பது இறைவன் மனுமக்களுக்கு ஈந்துள்ள பல்வேறு உணர்ச்சிகளிலொன்று. தன்மானமுள்ள (self-respect) எந்த மனிதனுக்கும் கோப உணர்வு இருக்கும். ஆனால் அக்கோப உணர்ச்சியை எவ்வாறு கையாளுகிறோம் என்பதில் தான் பிரச்சனையுள்ளது.

எதற்காகவும், கோபமே படக்கூடாது என்று திருமறை கற்பிக்கவில்லை. “நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது” (எபேசியர் 4:26) என்றுதான் பவுலடியார் கூறுகிறார். ஆகையால் இந்தக் கட்டுரையில், “கோபமே படாதீர்கள்” என்று கூற நான் முற்படவில்லை. மாறாக, “கோபத்தைக் கையாள்வது எப்படி ?” என்ற வழிமுறைகளைக் கற்றுக்கொடுக்கவே முயற்சி செய்துள்ளேன்.

கோபத்தினால் மற்றவர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தவும், உறவுகளை முறித்துப் போடவும் இயலும்; அதே கோபத்தினால் மற்றவர்களை நெறிமுறைப்படுத்தி உதவிடவும், நமது மனித உறவுகளிலே புதிய வலுவூட்டவும் இயலும். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய கோப உணர்வுகளைத் தானே தனது பலத்தினால் கையாளத் திருமறை ஊக்குவிக்கவில்லை. இறையாவியானவரின் (Holy Spirit) வழிநடத்துதலின்றிச் சரியான வழியில் மானுட உணர்ச்சிகளைக் கையாள்வது இயலாக் காரியம்.



# கிறிஸ்தவ அறிவு அபிவிருத்திச் சங்கம் (S.P.C.K.)

## மொகலாயரின் ஆட்சிக்குப் பின்

அரேபியரின் படையெடுப்பிற்குப் பின் அநேக நூற்றாண்டுகளாக வட இந்தியா அவர்களுடைய ஆட்சிக்குட்பட்டு இருந்தது. துருக்கியரான பாபர், 1526ல் டில்லி சுல்தானைப் போரில் தோற்கடித்தார். அவருடைய ஆளுகையுடன் மொகலாயர் ஆட்சி இந்தியாவில் ஆரம்பமாயிற்று. அவருக்குப் பின் அவருடைய பின்சந்ததியார்களான ஹுமாயூன், அக்பர், ஜகாங்கீர், ஷாஜகான், ஔரங்கசீப் ஆகியோர் தமது பேரரசைத் தக்காணம் வரை விரிவுபடுத்தி ஏறத்தாழ 200 ஆண்டுகளாக ஆட்சி செய்தனர்.


கடைசி மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப் ஆவார். சீகன்பால்க் தரங்கம்பாடிக்கு வந்த ஓராண்டு காலத்திற்குப் பின் ஔரங்கசீப் மரணமடைந்தார். இவரது மரணத்திற்குப்பின் மொகலாயப் பேரரசு சிதைந்து போயிற்று. தென்னிந்தியா, டில்லி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றிருந்த போதிலும் ஒற்றுமையில்லாமலிருந்தது. நிசாம் உல்முலக் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருந்த ஹைதராபாத் முக்கிய இடமாக இருந்தது. மத்திய பீடபூமிக்கும், கிழக்குக் கடற்கரைக்கும் இடைப்பட்டிருந்த நிலப்பரப்பு கர்நாடகம் என்றழைக்கப்பட்டது. இது ஆற்காட் நவாபின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது. அவரோ, ஹைதராபாத் நிஜாமுக்குக் கீழ்ப்பட்டவர். தெற்கே, திருச்சிராப்பள்ளியை ராஜா ஒருவர் ஆட்சி செய்து வந்தார். தஞ்சாவூர் தனி ஆளுகைக்குட்பட்டு இருந்தது. மராத்திய இளவரசர் இதை ஆண்டு வந்தார். மைசூர் சுதந்திர

நாடாக வளர்ச்சியடைந்து வந்தது. பாளையக்காரர் என்னும் குறுநில மன்னர்கள் சிறு சிறு நிலப்பரப்புகளை ஆண்டு வந்தனர்.

இந்நாடுகள் தங்களுடைய விடுதலையை வலியுறுத்தும் அதே காலக்கட்டத்தில் ஆங்கிலேய, பிரெஞ்சு வாணிபக் கம்பெனிகள் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டப் போட்டியிட்டன. பிரான்சுக்கும். இங்கிலாந்துக்கும் இடையே 1743-ல் போர் மூண்டது. இதன் விளைவாக இந்தியாவில் இவர்களுடைய வாணிப மையங்களில் இருந்த இராணுவங்களுக்கிடையே யுத்தங்கள் ஏற்பட்டன. இரண்டு முறை பிரெஞ்சுக்காரர் சென்னையைத் தாக்கினர்.

சண்டைகள் ஓரளவு ஓய்ந்தபோதிலும் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், மைசூரை ஆண்ட ஹைதர் அலி, அவருடைய மகன் திப்பு சுல்தான் ஆகியோர்க்குமிடையே கடும் போர்கள் ஏற்பட்டன. பாளையக்காரர்களும், குறுநில மன்னர்களும் இப்போர்களில் ஈடுபட்டனர். யாருடன் சேர்ந்தால் அதிகப் பயன் கிடைக்குமோ அவர்களோடு இவர்கள் சேர்ந்து போரிட்டனர்.

இத்தகைய அரசியல் கொந்தளிப்புகளுக்கிடையிலும் இந்தியாவில் புராட்டஸ்டண்ட் திருச்சபை கடவுளுக்குச் சாட்சியாய்ச் செயல்பட்டது. இந்தியாவிலும், ஐரோப்பாவிலும் அக் காலக்கட்டத்தில் குழப்பங்கள் மலிந்திருந்தன. இந்தப் பின்னணியை நினைவில் கொண்டவர்களாய் இத்திருச்சபை எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்பதைக் குறித்து சிந்திக்க வேண்டும்.



### அருள்திரு. B.சுல்ட்ஸ்

இந்தியாவுக்கு வந்த முதல் ஐந்து டேனிஷ் மிஷனெரிமாரில், சிலர் 1720-ஆம் ஆண்டுக்குள்ளாகத் தங்களுடைய தாய்நாடு திரும்பி விட்டனர். வேறு சிலர் இங்கேயே மரித்துப்போயினர். மேலும் மூன்று ஜெர்மானிய லூத்தரன் மிஷனெரிமாரை டென்மார்க் அரசர் இந்தியாவுக்கு அனுப்பினார். இவர்கள் 1719 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்தியா

வந்து சேர்ந்தனர். தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டபின், அச்சகம், பள்ளிகள், சபைகள் ஆகியவற்றைக் கவனித்துக் கொண்டதோடு நற்செய்தியையும் அறிவித்தனர். இக்குழுவின் தலைவராக அருள்திரு. சுல்ட்ஸ் (Schultze) செயல்பட்டார். மற்றவர்களுடன் சேர்ந்து பணிசெய்ததோடு சீகன்பால்கின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற முயன்றார். பள்ளிச் சிறுவர்களை நற்செய்திப்பணி செய்திட கிராமங்களுக்கு அழைத்துச் செல்லும் பழக்கத்தை மீண்டுமாகப் செல்லும் பழக்கத்தை மீண்டுமாகப் புதுப்பித்தார். சீகன்பால்க் போலவே இவரும் மொழிகளை எளிதில் கற்றுக்கொண்டார். துண்டுப் பிரசுரங்கள், சிறிய கட்டுரைகள், இதர இலக்கிய இதழ்கள் ஆகியவற்றை விரைவில் மொழியாக்கம் செய்தும், எழுதியும் அச்சிட்டார். குறுகிய காலத்தில் மிகுதியானவற்றை உருவாக்கியபடியால் இவர் எழுதினவைகளும், மொழியாக்கம் செய்தவைகளும் தரமானவைகளாக இல்லாமல் போயிற்று. நான்காண்டுகளுக்குப் பிறகு பழைய ஏற்பாட்டை மொழியாக்கம் செய்ய முனைந்தார். சீகன்பால்க் மொழியாக்கம் செய்துவிட்டுச் சென்ற அத்தியாயத்திலிருந்து தொடர்ந்தார். ஈராண்டுக் காலத்திற்குள் மொழியாக்கம் செய்து முடித்தார். பழைய ஏற்பாடு 1728- ல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட பிறகுதான், மொழிபெயர்ப்பில் அநேக பிழைகள் இருப்பதை இவருடைய சக கண்டுபிடித்தனர்.

சுல்ட்சுடன் இணைந்து பணியாற்றுவது எளிதான காரியமல்ல. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்பவர்; பேரார்வம் மிக்கவர். சக ஊழியர்களுடன் இசைவில்லாதவர். திருச்சபையில் இருந்த சாதிப்பிரிவினைகளை மிகவும் வன்மையாய்க் கண்டித்த காரணத்தால் சபையில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. கோயில்களிலும், வகுப்பறைகளிலும் குடியானவர்களும் பஞ்சமர்* எனப்படும், கீழ்ச் சாதியினரும் தனித்தனி இடங்களில் அமர்வது வழக்கமாக இருந்தது. இவ்வழக்கத்தைச் சுல்ட்ஸ் மிகவும் எதிர்த்தார். இறுதியாக 1726-ல் தரங்கம்பாடியை விட்டுச் சென்னைக்குச் சென்றார்.

# திருமறையை தெரிந்துகொள்வோம்

சங்கீதம் 21 - 30

1. கர்த்தருடைய வல்லமையிலே யார் மகிழ்ச்சியாயிருக்கிறார்?
2. கர்த்தருடைய கை யாரை எட்டிப்பிடிக்கும்?
3. எந்த தேசத்தில் பலத்த எருதுகள் இருந்தன?
4. ராஜ்ஜியம் யாருடையது?
5. ஜீவனுள்ள நாளெல்லாம் என்ன தொடரும்?
6. கர்த்தரால் ஆசீர்வாதத்தை யார் பெறுவார்?
7. யாருடைய சந்ததி பூமியை சுதந்தரித்துக் கொள்ளும்?
8. யார் வெட்கப்பட்டு போவார்கள்?
9. கண்களுக்கு முன்பாக இருக்கிறது என்ன?
10. யாருக்கு திடமானதாயிருந்து காத்திருக்க வேண்டும்?
11. தண்ணீர்களின் மேல் தெனிக்கிறது என்ன?
12. நீடிய வாழ்வு எது?
13. கர்த்தர் யார் நம்மை மேற்கொண்டு மகிழவொட்டாமல், நம்மை கைதூக்கி எடுத்தார்?
14. நான் எவ்வாறு நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன் என்று தாவீது கூறுகிறார்?
15. யார் புசித்து திருப்தியடைவார்கள்?

கடந்த ஜுலை மாதம் கேள்விகளுக்கு பதிலளித்த அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Stella Jashwanth
2. Mrs.Sylvia Sekar
3. Mrs.Baby Jesudass
4. Mrs.Ruby Jeyaseelan
5. Mrs.Benisha Christabel
6. Mrs.Kavitha Johnson
7. Mrs.Rubavathi

**Children's Corner Colouring**

1. S.Shaun Oliver
2. Sanhedrin

# KID'S CORNER

## The Power of Prayer

The year 2020 was definitely a year of change for all of us- schools and churches had closed and were made online. We followed social distancing rules and started wearing masks. This year was completely unexpected and very different. But during all these changes in our day-to-day lives, one thing remained constant, the unfailing love from our Lord. Throughout these difficult times, we found strength in our Lord Jesus Christ.

*In Matthew 14:25-31, "Shortly before dawn Jesus went out to them, walking on the lake. When the disciples saw Him walking on the lake, they were terrified. 'It's a ghost,' they said, and cried out in fear. But Jesus immediately said to them: 'Take courage! It is I. Don't be afraid.' 'Lord, if it's You,' Peter replied, 'tell me to come to You on the water.' 'Come,' He said. Then Peter got down out of the boat, walked on the water and came toward Jesus. But when he saw the wind, he was afraid and, beginning to sink, cried out, 'Lord, save me!' Immediately Jesus reached out His hand and caught him. 'You of little faith,' He said, 'why did you doubt?'"*

**The scripture shows that Peter actually walks on water while he is focused on Jesus as he is walking towards Him. Peter sinks when he turns his focus away from Jesus and toward the winds (the storm).**

**Then, of course, Jesus immediately reaches a hand out to save Peter as he begins to sink in the water.**




# STAY-AT-HOME ACTIVITY:

**What we learn from this passage is that when you focus more on Jesus, the storm around can never harm you. The more you focus on Jesus, the more like Him you become. And how can we get closer to God? Through prayer.**

Let us all make our New Years resolution this year to pray more to God and be more closer to Him in 2021.
We can start off with the 5 finger prayer.
Make a craft of the prayer below to remember it more clearly!

## THE 5 FINGER PRAYER




Thumb: This is the finger that is the closest to you, so start by praying for those who are close to you (Mom, Dad, siblings, grandparents, friends).

Index Finger: We use this finger to point to give directions. Pray for the people who point and guide you in life (Teachers).

Ring finger: Did you know that this is the weakest finger? That's why it reminds us to pray for the weak and poor.

Middle finger: This is the tallest finger, it reminds us to pray for our pastors and leaders.

Pinky finger: Lastly, the smallest finger should remind you to pray for yourself.

**Don't forget to send a picture of your craft to the**
**Junior Church Director– Rajalin aunty and Pastor Uncle on Whatsapp!**
**050 3079625 050 703 2150**

https://puzzel.org/en/memory/play?p=-MPnNCO90D4UVBKZ8ukH

## PLAY THE ABOVE GIVEN LINK FOR A MEMORY GAME ON THE 5 FINGER PRAYER! SEND US A SCREENSHOT OF YOUR SCORE!





*Call to me and I will answer you and tell you great and unsearchable things you do not know.*
***Jeremiah 33:3***



## Birthday & Wedding day Celebrants

**1st Aug**
MASTER JUAN SAMUEL.M
MISS JOANNA SAHRON

**2nd Aug**
MRS S.D.AHATHA SUMI

**3rd Aug**
MISS CHRISTINA MEKALA
MASTER H.ARWIN DERICK

**4th Aug**
MR HENRY VASANTH KUMAR S.
MASTER JOSIAH BERNARD SAMUEL
MASTER JOSHWIN CHRISTO

**5th Aug**
MRS SUGANTHI.J
MRS VEERANI SARAVANAKUMAR
MISS JOSEPHIN GIFTA
Mrs SELINA

**6th Aug**
MISS MOUSHMIABISHA
MR NIRMAL RAJKUMAR

**7th Aug**
MRS ANGELINE

**8th Aug**
MR DAVID A. (NEELAX)
MISS JIREHLYN PAULA JOHIN

**9th Aug**
MASTER MISHEL GERSOME DANIEL

**10th Aug**
MASTER BRAYDEN JEROME
MR S.SIMEYON
MISS ZOEY FLORES

**11th Aug**
MR ANANTHA RAJ

**12th Aug**
MRS HANNAH SUMITHA
MASTER SHAUN OLIVER

**13th Aug**
MR YOVAN MAHENDRAN

**14th Aug**
MISS SARAH SARAVANAKUMAR

**15th Aug**
MR SAMUEL SATHIYA
MRS PREMA ABRAHAM K.
MRS ANITA JULIET BROWN
MISS EVELYN MICHELLE

**17th Aug**
MRS SUSI VASANTHA KIRUBAI BASKARAN

**18th Aug**
MR MATTHEW

**19th Aug**
MISS ASENATH JANE
MISS CATHERINE NARGUNAM
MRS SUBHA

**20th Aug**
MR JASPER JOHN PAUL P.
MASTER JASON PRESLEY
MISS DINAH SHINY
MISS DANIELA

**23rd Aug**
MASTER LIAM JOHN

**25th Aug**
MR RAJESH MANIRAJ

**27th Aug**
MASTER JERRINE J.
MR SURESH D.
**28th Aug**
MISS SHIRLEY.S
**29th Aug**
MRS KIRUBA PRIYADHARSHINI.M
MR JACOB SAMUEL

**31st Aug**
MASTER JEROME SAMSON P.
MISS JERUSHA.R
MRS J.THUKILAJA

## Wedding Anniversary

**8th Aug**
MR. WILLIAMS PRABHAKARAN & MRS. EBSIBA
**18th Aug**
MR. BIJU NAYAGAM K.P.M. & MRS. NIJA M.
**20th Aug**
MR. DAVID PRAKASH GNANIAH & MRS. FELISHA JANE
**22nd Aug**
MR. JOSHUA VENUGOPAL E. & MRS. MADONA ANBAZHAGAN
**23rd Aug**
MR. THANASEKAR & MRS. RADHIKA SEKAR
**29th Aug**
MR. LIVINGSTON RAJKUMAR. J & MRS. JUDITH SHINY. J

# DAILY BIBLE READING AUGUST 2024

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01THUR | எபிரெயர் /HEBREW 1:14 | எபிரெயர் /HEBREW 2:1-18 |
| 02 FRI | எபிரெயர் /HEBREW 3:1-19 | எபிரெயர் /HEBREW 4:1-16 |
| 03 SAT | எபிரெயர் /HEBREW 5:1-14 | எபிரெயர் /HEBREW 6:1-20 |
| 04 SUN | சங்கீதம் /PSALMS 109 | சங்கீதம் /PSALMS 110 |
| 05 MON | எபிரெயர் /HEBREW 7:1-28 | எபிரெயர் /HEBREW 8:1-13 |
| 06 TUE | எபிரெயர் /HEBREW 9:1-28 | எபிரெயர் /HEBREW 10:1-39 |
| 07 WED | எபிரெயர் /HEBREW 11:1-40 | எபிரெயர் /HEBREW 12:1-28 |
| 08 THUR | எபிரெயர் /HEBREW 13:1-25 | யாக்கோபு /JAMES 1:1-27 |
| 09 FRI | யாக்கோபு /JAMES 2:1-26 | யாக்கோபு /JAMES 3:1-18 |
| 10 SAT | யாக்கோபு /JAMES 4:1-17 | யாக்கோபு /JAMES 5:1-20 |
| 11 SUN | சங்கீதம் /PSALMS 111 | சங்கீதம் /PSALMS 112 |
| 12 MON | 1 பேதுரு /1 PETER 1:1-25 | 1 பேதுரு /1 PETER 2:1-25 |
| 13 TUE | 1 பேதுரு /1 PETER 3:1-22 | 1 பேதுரு /1 PETER 4:1-19 |
| 14 WED | 1 பேதுரு /1 PETER 5:1-14 | 2 பேதுரு /2 PETER 1:1-21 |
| 15 THUR | 2 பேதுரு /2 PETER 2:1-22 | 1 பேதுரு /1 PETER 3:1-18 |
| 16 FRI | 1 யோவான் /1JOHN 1:1-10 | 1 யோவான்/1JOHN 2;1-29 |
| 17 SAT | 1 யோவான்/1JOHN 3:1-24 | 1 யோவான்/1JOHN 4:1-21 |
| 18 SUN | சங்கீதம் /PSALMS 113 | சங்கீதம் /PSALMS 114 |
| 19 MON | 1 யோவான்/1JOHN 5:1-21 | 2 யோவான்/2JOHN 1:1-13 |
| 20 TUE | 3 யோவான்/3JOHN 1:1-15 | யூதா /JUDE 1:1-25 |
| 21 WED | வெளி /REVELATION 1:1-20 | வெளி /REVELATION 2:1-29 |
| 22 THUR | வெளி /REVELATION 3:1-22 | வெளி /REVELATION 4:1-11 |
| 23 FRI | வெளி /REVELATION 5:1-14 | வெளி /REVELATION 6:1-17 |
| 24 SAT | வெளி /REVELATION 7:1-17 | வெளி /REVELATION 8:1-13 |
| 25 SUN | சங்கீதம் /PSALMS 115 | சங்கீதம் /PSALMS 116 |
| 26 MON | வெளி /REVELATION 9:1-21 | வெளி /REVELATION 10:1-11 |
| 27 TUE | வெளி /REVELATION 11:1-19 | வெளி /REVELATION 12:1-18 |
| 28 WED | வெளி /REVELATION 13:1-18 | வெளி /REVELATION 14:1-20 |
| 29 THUR | வெளி /REVELATION 15:1-8 | வெளி /REVELATION 16:1-21 |
| 30 FRI | வெளி /REVELATION 17:1-18 | வெளி /REVELATION 18:1-24 |
| 31 SAT | வெளி /REVELATION 19:1-21 | வெளி /REVELATION 20:1-15 |

# ஆராதனை தியானப் பொருள்

## ஆகஸ்ட் - 2024

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு Aug-4 2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஏசாயா 6:1-8<br>அப்போஸ்தலர் 9:10-18<br>லூக்கா 10:1-11<br>சங்கீதம் 40:1-13 | அருட்பணி: கடவுளின் வேதனையை பகிர்தல்<br>MISSION : SHARING GOD'S PAIN |
| ஞாயிறு Aug-11 2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஆதியாகமம் 7:11-24<br>ரோமர் 6:1-14<br>யோவான் 12:20-26<br>சங்கீதம் 29 | திருமுழுக்கு: கிறிஸ்துவுடன் இறத்தலும் எழுதலும்<br>BAPTISM : DYING AND RISING UP WITH CHRIST |
| ஞாயிறு Aug-18 2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | 2 இராஜாக்கள் 4:42-44<br>1 கொரிந்தியர் 11:23-30<br>யோவான் 6:15-59<br>சங்கீதம் 100 | திருவிருந்து எனும் சாக்கரமந்து<br>SACRAMENT OF HOLY QURBANA/HOLY SACRIFICE |
| ஞாயிறு Aug-25 2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | யோனா 4:1-11<br>அப்போஸ்தலர் 8:26-40<br>மத்தேயு 22:1-14<br>சங்கீதம் 82 | பன்மைத்துவம்: பொதுவான மனித நேயமும் நம்பிக்கையைப் பகிர்தலும்<br>PLURALITY : COMMON HUMANITY AND FAITH SHARING |